பக்கங்கள் 20

# காலை முரசு

முழக்கம்: 02 வள்ளுவ ஆண்டு 2055 ஆடி 05 திங்கட்கிழமை 21.07.2025 அதிர்வு 351

## நாளை கூடும் நாடாளுமன்றம்

### வெள்ளி வரை அமர்வுகள்



நாடாளுமன்றம் நாளை செவ்வாய்க் கிழமை முதல் எதிர் வரும் வெள்ளிக் கிழமை வரை கூடவுள்ளது. 03






# யாழ். வட்டுக்கோட்டையில் இரு குழுக்கள் வன்முறை!

- பொலிஸார் துப்பாக்கிச் சூடு
- களமிறக்கப்பட்டது எஸ்.ரி.எவ்.
- மூவர் கைது; பலர் தலைமறைவு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மூளாய் பகுதியில் நேற்று இரண்டு குழுக்கள் வன்முறையில் ஈடுபட்டனர். இதையடுத்துப் பொலிஸார் வானத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு வன்முறையைக் கட்டுப்படுத்தினர். அத்துடன் வன்முறையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மூவரைப் பொலிஸார் கைது செய்தனர். 03








உள்ளூராட்சித் தேர்தல்களில் வேறு கட்சிகளுடன் கூட்டுச் சேராமல் தனித்து நின்று போட்டியிட்ட தமிழரசுக் கட்சி அதன் மூலம் பல இடங்களில் ஒருவாறு ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றித் தன்னை நிலை நிறுத்தி விட்டது.

முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக அதிகாரத்துக்கு வந்த சமயங்களில், மற்றைய கட்சிகளின் சுமையையும் சேர்ந்து சுமக்க வேண்டிய கட்டாயம் தமிழரசுக்கு இருந்தது. இப்போது அநதப் பிரச்சினை இல்லை. அதனால் சுழற்றி விளாசுகிறது அக்கட்சி.

உதாரணத்துக்கு மண்முனை தென் எருவில்பற்று (களுதாவளை) பிரதேச சபையில் ஒரு தீர்மானம். 03





# மூதூர் – சம்பூர்ப் பகுதியில் மற்றோர் மனிதப் புதைகுழி?

## நாளை மறுதினம் அகழ்வதற்கு உத்தரவு

(எஸ்.கீதபொன்கலன்)

மூதூர் – சம்பூர் கடற்கரை ஓரமாக மிதிவெடி அகழ்வுப் பணியின்போது நேற்று மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து குறித்த பணியை எதிர்வரும் 23ஆம் திகதி வரை இடைநிறுத்துமாறு மூதூர் பதில் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சம்பூர் சிறுவர் பூங்காவை அண்மித்துள்ள கடற்கரையோர பகுதியில் கடந்த ஒரு வாரகாலமாக ஆயுபு எனப்படுகின்ற மிதிவெடி அகழும் நிறுவனம் தங்களுக்குரிய தளபாடம் மற்றும் பொருள்களுடன் முகாமிட்டு வெள்ளிக்கிழமை மிதிவெடி அகழும் பணியை ஆரம்பித்திருந்தது.

இந்நிலையில் அந்தப் பகுதியில் நேற்றைய தினம் அகழ்வுப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது சிதைவடைந்த மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டமையை அடுத்து அந்தப் பணி இடநிறுத்தப்பட்டு நீதிமன்ற உத்தவுக்காக காத்திருந்தனர்.

இந்நிலையில் அந்த இடத்திற்கு வருகை தந்த மூதூர் நீதிமன்ற பதில் நீதிவான் எம்.எம்.நஸ்லீம் இடத்தை பார்வையிட்டமையோடு, அப்பணியை எதிர்வரும் 23ஆம் திகதிவரை தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்குமாறு உத்தரவிட்டார்.

அந்தப் பகுதியை நீதிவானின் முன்னிலையில் அரச பகுப்பாய்வு திணைக்களம், சட்ட வைத்திய அதிகாரி, தொல்பொருள் திணைக்களம், புவிச்சரிதவியல், அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம் ஆகிய திணைக்களங்களின் பிரசன்னத்துடன் நாளை மறுதினம் புதன்கிழமை அகழ்வதற்கும் அவர் உத்தரவிட்டுள்ளமையுடன் பொலிஸாரை அந்தப் பகுதியில் பாதுகாப்புக் கடமைகளுக்காக ஈடுபடுத்துமாறும் உத்தரவிட்டுள்ளார்.

அகழ்வுப் பணியின்போது சிதைவடைந்த மனித தலைப்பகுதி மற்றும் கால்களின் எலும்புப்பகுதிகளே கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்தப் பகுதியில் இருந்து சுமார் 40 மீட்டர் தூரத்தில் சம்பூர் படுகொலையின் நினைவாக அமைக்கப்பட்ட தூபியும் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.





# பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொற்றா நோய்களால் பாதிப்பு

## பதில் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு



இலங்கையில் தற்போது கடமையில் உள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களில் சுமார் 20 - 40 சதவீதமானோர் தொற்றா நோய்களால் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் என்று பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்தார்.

புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட சப்பிரகமுவ மாகாண குற்றப் புலனாய்வுப் பிரிவு திறப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அந்த நிகழ்வில் பதில் பொலிஸ்மா அதிபர் மேலும் உரையாற்றுகையில்,

"தற்போது கடமையில் உள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களில் சுமார் 20 - 40 சதவீதமானோர் தொற்றா நோய்களால் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். 30 சதவீதமானோர் தொற்றா நோய்களுக்கான பரிசோதனைகளை மேற்கொள்ளவில்லை என்பதும் தெரிய வந்துள்ளது. மீதமாக உள்ள 30 சதவீதமானோர் மாத்திரமே நல்ல தேகாரோக்கியத்துடன் உள்ளனர்.

ஒரு சில அதிகாரிகள் குடும்பப் பிரச்சினை, தொழில் பிரச்சினைகளால் தொற்றா நோய்களுக்கு ஆளாகியுள்ளனர். ஆகையால் எதிர்வரும் நாட்களில் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான பணிகளை ஒழுங்குபடுத்தவும், அவற்றை மேலும் திறம்படுத்தவும் எதிர்பார்த்துள்ளோம். அத்தோடு உயரிய கடமையாற்றும்பொலிஸ்உத்தியோகத்தர்களுக்கான சேவை சலுகைகளும் விரைவில் அதிகரிக்கப்படும்.

பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் போதியளவானதாக இல்லை. குறைந்த சம்பளத்தையே அவர்கள் பெறுகின்றனர். ஆகையால் அவர்களின் சம்பளம் தொடர்பாக ஜனாதிபதியும் விசேட கவனம் செலுத்தியுள்ளார். இதனால் எதிர்வரும் வருடம் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான சம்பள திட்டத்தை தயாரிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன." - என்றார்.

### இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரேரணை என்னவோ செம்மணி விவகாரத்தை ஒட்டி, பிரதேச சபைத் தலைவரின் உரை என்ற பெயரில்தான் முன்னெடுக்கப்பட்டது. ஆனால் இந்தியப் படைகளின் காலத்திலும், பின்னரும் கிழக்கில் மட்டக்களப்பு மற்றும் பகுதிகளில் இடம்பெற்ற எல்லாப் படுகொலைகள், ஆள்கள் காணாமலாக்கப்பட்டமை, பாலியல் வல்லுறவுகள் பற்றிய விடயங்கள் குறித்து மக்களின் முறைப்பாடுகளை முறையாகப் பதிந்து, சேகரித்து, முன்னெடுப்பதற்கான நடமாடும் சேவை ஒன்றை உருவாக்க வேண்டும் என்று அந்தப் பிரேரணை விரிந்து சென்றது.

இந்தப் பிரேரணை தங்கள் கையைச் சுட்டதாலோ என்னவோ பிள்ளையான் அணி, ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணியின் ரெலோ அணி மற்றும் தேசிய மக்கள் சக்தி தரப்பினர் இந்தப் பிரேரணை கொண்டுவரப்பட்ட சமயம் அதை எதிர்த்து வெளிநடப்பு செய்தனர்.

பத்து உறுப்பினர்கள் வெளியேற, எஞ்சியிருந்த 11 உறுப்பினர்களின் இணக்கத்தோடு அந்தப் பிரேரணை தீர்மானமாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இந்த விடயம் உத்தியோகபூர்வமாக தகவல் சேகரிக்கும் விவகாரமாக முன்னெடுக்கப்பட்டால் பல தமிழ் கட்சிகளின் பிரமுகர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் மீண்டும் பகிரங்கமாகும் என்று பேசப்படுகின்றது. பல பிரமுகர்களின் மடியில் கனமிருப்பதால் வழியில் பயமிருப்பதாகக் கூறப்படுகின்றது.

பாடசாலை மாணவி ஒருத்தி - விஜித்தா - வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொல்லச்சப்பட்ட விடயம் குறித்தும் பிரதேச சபைத் தலைவர் தமது உரையில் குறிப்பிட்டமை கிழக்கின் கிருஷாந்தி குமாரசுவாமி விவகாரம் போலத் தோன்றியது. வடக்கில் கிருஷாந்தி விவகாரம் பகிரங்கமாகி அம்பலமானது. கிழக்கில் அது அமுங்கிப் போயிருக்கின்றது. இப்போதைய தீர்மானம் அதைப் பகிரங்கப்படுத்த உதவுமா என்பதுதான் கேள்வி.

கிருஷாந்தி விவகாரம் சிங்களப் படைக்கு எதிரானது. ஆனால் விஜித்தா விவகாரம் தமிழ்க் கட்சி ஒன்றின் பிரமுகர் ஒருவருக்கு எதிரானது என்று கூறப்படுகின்றது.

அதேபோல, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பிரேமினி மற்றும் முஸ்லிம் பெண்ணான ரிபாயா கொல்லப்பட்டமை போன்றவை எல்லாம் கிருஷாந்தி விவகாரத்தைப் போல உணர்வெழுச்சியைத் தூண்டக் கூடியன.

செட்டிப்பாளையம் ரெலோவின் பிரமுகரான முன்னாள் எம்.பி. கோவிந்தன் கருணாகரனின் (ஜனாவின்) சொந்த இடம். அங்கும் எருவிலிலும் மைதானத்தில் இந்தியப் படைகளின் காலத்தில் வெட்டிக் கொல்லப்பட்டவர்கள் பற்றிய சாட்சியங்கள் மற்றும் முறைப்பாடுகளைப் பதிந்து ஆவணமாக்கும் நடவடிக்கையைத்தான் களுதாவளைப் பிரதேச சபைத் தலைவர் முதலில் தொடங்கப் போகின்றார்.

எனக்கு என்னவோ, பின்னால் வெடிக்கப் போகின்ற பெரும் வெடிகுண்டுக்கு இப்போது திரி பற்ற வைக்கப்பட்டிருப்பதாகவே தோன்றுகின்றது.

### நாளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றம் கூடும் ஒவ்வொரு நாளும் காலை 9.30 மணி முதல் 10 மணி வரை நிலையியற் கட்டளை 22 இல் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 6 வரையான நாடாளுமன்ற அலுவல்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து காலை 10 மணி முதல் 11 மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் 11 மணி முதல் 11.30 மணி வரை நிலையியற் கட்டளை 27 (2)இன் கீழான கேள்விக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

அதன்பிரகாரம் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணி முதல் மாலை 5 மணி வரை வேலையாட்களின் வரவு – செலவுத் திட்ட நிவாரணப்படி (திருத்தச்) சட்டமூலம் (2005ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க சட்டத்தைத் திருத்துவதற்கானது), வேலையாட்களின் வரவு – செலவுத் திட்ட நிவாரணப்படி (திருத்தச்) சட்டமூலம் (2016ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க சட்டத்தைத் திருத்துவதற்கானது) மற்றும் சேவையாளர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனம் (திருத்தச்) சட்டமூலம் ஆகியவை மீதான இரண்டாவது மதிப்பீட்டு விவாதத்தை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேசிய குறைந்தபட்ச வேதனம் (திருத்தச்) சட்டமூலம் மற்றும் வேலையாட்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப்படி (திருத்தச்) சட்டமூலங்கள் இரண்டு ஆகியவற்றுக்கு எதிராக உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு அமைய மூன்று சட்டமூலங்களும் விசேட பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படவிருப்பதாக செயலாளர் நாயகம் குறிப்பிட்டார்.

இதன் பின்னர் மாலை 5 மணி முதல் 6 மணி வரை எதிர்க்கட்சியால் கொண்டுவரப்படும் ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதம் இடம்பெறவுள்ளது.

மறுநாள் புதன்கிழமை முற்பகல் 11.30 மணி முதல் மாலை 5 மணி வரை கம்பனிகள் (திருத்தச்) சட்டமூலம் மீதான இரண்டாவது மதிப்பீட்டு விவாதத்துக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மாலை 5 மணி முதல் 5.30 மணி வரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணி முதல் மாலை 5 மணி வரை இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டமூலம் மீதான இரண்டாவது மதிப்பீட்டு விவாதத்துக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மாலை 5 மணி முதல் 5.30 மணி வரை ஆளுங்கட்சியால் கொண்டுவரப்படும் ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை மீதான விவாதம் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணி முதல் மாலை 5 மணி வரை மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், அபேரத்ன பண்டார ஹேரத் பிலபிட்டிய, டபிள்யூ.பி.ஏக்கநாயக்க, லக்கி ஜயவர்தன மற்றும் மாலினி பொன்சேகா ஆகியோர் தொடர்பான அனுதாபப் பிரேரணை எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இதனைத் தொடர்ந்து மாலை 5 மணி முதல் 5.30 மணி வரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

# மயிலிட்டி கண்ணகி அம்பாள் உற்சவத்தில் கண்ணன் பிரியா குழுவினரின் வில்லிசை

மயிலிட்டி வீரமாணிக்கன் தேவன்துறை அருள்மிகு கண்ணகி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவத்தின் நிறைமணித் திருவிழாவை முன்னிட்டு இணுவையூர் புகழ் கண்ணன் பிரியா குழுவினரின் வில்லிசை பாட்டு இடம்பெற்றுள்ளது.

இராசதுரை மற்றும் சகோதரர்கள் குடும்பத்தினரின் உபயமாக இடம்பெற்ற நிறைமணித் திருவிழாவை முன்னிட்டு கடந்த திங்கள் கிழமை இரவு ஆலய வடக்கு வீதியில் இடம்பெற்ற வில்லுப்பாட்டு நிகழ்வில் 'வள்ளி திருமணம்' என்ற தலைப்பில் பாடல் மற்றும் உரையாடல் வடிவில் இணுவையூர் கண்ணன் பிரியா குழுவினரால் எடுத்துரைக்கப்பட்டிருந்தது.



## யாழ். வட்டுக்கோட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வன்முறையைத் தொடர்ந்து பொலிஸ் விசேட அதிரடிப் படையினர், இராணுவத்தினர் மூளாய் பகுதியில் களமிறக்கப்பட்டுள்ளனர்.

அந்தப் பகுதியில் பொலிஸ் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வன்முறைச் சம்பவத்தில் ஒரு மோட்டார்சைக்கிள்தீக்கிரையாக்கப்பட்டது. மேலுமொரு மோட்டார் சைக்கிள் அடித்து நொறுக்கப்பட்டு சேதமாக்கப்பட்டது

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மூளாய் பகுதியில் இரு தனி நபர்களுக்கிடையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஏற்பட்ட தர்க்கம், வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையம் வரையில் சென்று , தீர்த்து வைக்கப்பட்டது.

இந்நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரு நபர்களின் பிரச்சினை மீண்டும் தலைதூக்கிய நிலையில் , அது அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களின் பிரச்சினையாக உரு மாறி இரு தரப்பினரும் மோதலில் ஈடுபட்டனர்.

அதன்போது மோட்டார் சைக்கிள் ஒன்று தீக்கிரையாக்கப்பட்டது. மற்றுமொரு மோட்டார் சைக்கிள் அடித்து நொறுக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் அறிந்து வட்டுக்கோட்டைப் பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்த வேளை பொலிஸார் மீது கல் வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

அதையடுத்துப் பொலிஸார் வானத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு அந்தப் பகுதியில் குழுமியிருந்தவர்களைத் துரத்தினர்.

அத்துடன் வன்முறைச் சம்பவத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மூவரைப் பொலிஸார் கைது செய்தனர். பலர் தலைமறைவாகியுள்ள நிலையில் அவர்களைக் கைது செய்வதற்குப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். இந்த வன்முறையைத் தொடர்ந்து பொலிஸ் விசேட அதிரடிப் படையினர், இராணுவத்தினர் மூளாய் பகுதியில் களமிறக்கப்பட்டுள்ளனர். அந்தப் பகுதியில் பொலிஸ் பாதுகாப்பும் பலப் படுத்தப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.









# தெற்கில் பாதாளக் குழுக்களுக்கிடையேயான மோதலே துப்பாக்கிச்சூடுகளுக்குக் காரணம்!

## அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவிப்பு

தெற்கில் பாதாளக் குழுக்களுக்கிடையிலான மோதல்களே தொடர்ச்சியான துப்பாக்கிப் பிரயோகங்களுக்கு அடிப்படைக் காரணமாக அமைகின்றது என்று பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்தார்.

உள்நாட்டில் பாதாளக் குழுக்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்காக விசேட அதிரடிப் படையினரின் பங்கேற்புடன் தேடுதல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, வெளிநாடுகளில் உள்ள பாதாளக் குழுவினரை கைது செய்வதற்கு இராஜதந்திர மட்டத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தொடர்ச்சியாக நடைபெறுகின்ற துப்பாக்கிப் பிரயோகங்களால் பொதுமக்களின் பாதுகாப்பு தொடர்பில் காணப்படுகின்ற கரிசனைகள் தொடர்பில் கேள்வி எழுப்பியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அண்மைய நாட்களில் நடைபெற்று வருகின்ற துப்பாக்கிப் பிரயோகங்களின் பின்னணியில் பாதாளக் குழுக்களுக்கிடையேயான மோதல்களே காரணமாக இருக்கின்றது.



தெஹிவளையில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தின் பின்னணியிலும் அவ்விதமான மோதல் நிலைமையே காணப்படுகின்றது. துப்பாக்கிப் பிரயோகத்துக்கு உள்ளாகியவரும் பாதாளக் குழுச் செயற்பாடுகளுடன் தொடர்புடையவர் என்பது அடையாளம் காணப்பட்டுள்ளது.

துப்பாக்கிப் பிரயோகங்கள் உட்பட பாதாளக் குழுக்களின் செயற்பாடுகளை முழுமையாகக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்துள்ளோம். தற்போது விசேட அதிரடிப் படையினரின் பங்கேற்புடன் விசேட தேடுதல் நடவடிக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன், சட்டவிரோதமான ஆயுதங்கள் உள்ளிட்டவற்றை மீட்கும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனைவிடவும், நாட்டுக்கு வெளியில் இருந்து பாதாளக் குழுக்களை இயக்குகின்றவர்கள் மற்றும் உள்நாட்டு குற்றங்களுடன் தொடர்புடையவர்களை கைது செய்வதற்கும் இராஜதந்திர மட்டத்தில் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து விசேட குழுக்கள் குறித்த நாடுகளுக்கு அனுப்பி வைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் பாதுகாப்பு மிகவும் முக்கியமான விடயமாகும். அந்தவகையில் நாம் கடும்போக்கான நிலைமையை பொதுவெளியில் பிரயோகிக்க முடியாது. எனினும், குற்றப் புலனாய்வுப் பிரிவினர் உள்ளிட்ட அனைத்துப் பிரிவினரும் கூட்டிணைந்து செயற்படும் பொறிமுறையொன்று முன்னெடுக்கப்படுகின்றது.

அந்தவகையில் ஒவ்வொரு விடயங்கள் சார்ந்தும் விசேட விசாரணைகள் விரைந்து முன்னெடுக்கப்பட்டே வருகின்றன.

போதைப்பொருள் வியாபாரம், பாதாளக் குழுக்களின் செயற்பாடுகள் உள்ளிட்ட அனைத்து விடயங்களுக்கும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். அதற்கான பாதையில் சென்று கொண்டிருக்கின்றோம்." – என்றார்.



### சட்டவிரோதமான முறையில்

# இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபட்ட நால்வர் கைது!


கிரிந்திவெல பொலிஸ் பிரிவின் ரங்வல பகுதியில் அனுமதிப் பத்திரம் இன்றி சட்டவிரோதமான முறையில் இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபட்ட நால்வர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் நாள்வரும் 24 முதல் 42 வயதுக்குட்பட்ட கஹவத்தை பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

இரத்தினக்கல் அகழ்வுக்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் பொலி ஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நன்றி மறந்த கல்வியாளர்கள்

இலங்கையின் இலவசக் கல்வி முறையை நன்கு பயன்படுத்தி, அதில் படித்துத் தேறிய நிபுணர்கள், இந்த நாட்டுக்காகவும் இந்த மக்களுக் காகவும் பணியாற்ற வேண்டிய தங்க ளது கடமை யைத் துறந்து, சொந்த - வளமான - எதிர்காலத்திற்காக வெளிநாடு நோக்கிப் படையெடுக் கும் பிரச்சினையால் எழுந்துள்ள மூளை வடிகால் சர்ச்சை நாட்டைப் பெரும் பின்னடைவைக்குள் தள்ளி யிருப்பதாகச் சுட்டிக்காட்டப் படுகின்றது.

2022 முதல் 2024 வகையான மூன்று ஆண்டு காலப் பகுதியில் இலங்கை விசேட மருத்துவ நிபுணர்கள் உட்பட 1,489 மருத்துவர்களை மூளை வடிகால் மூலம் இழந்திருக்கின்றது. இதன் விளைவாக அரசாங்கத்திற்கும் வரி செலுத்துவோருக்கும் சுமார் 1,250 கோடி ரூபாவுக்கு மேல் இழப்பு ஏற்பட்டிருப் பதாக ஓர் ஆய்வு கண் டறிந்து இருக் கின்றது.

இத்தகைய மருத்துவர்களின் வெளி யேற்றம் - குறிப்பாக கிராமப்புற மற்றும் பின் தங்கிய பகுதிகளில் - சுகாதார உள்கட்டமைப்பைச் சீர்கு லைத்துள்ளது. பல முக்கிய மருத் துவத் துறைகளில் பெரும் பற்றாக்கு றைக்கு வழி வகுத் துள்ளது. நாட்டின் சுகாதார, மருத்துவ சேவை துறையே பெரும் பின்னடைவை சந்தித் துள்ளது.

இது பற்றிய ஆய்வு அறிக்கை லண்ட னைத் தளமாகக் கொண்ட சர்வதேச சுகாதாரத் திட்டமிடல் மற்றும் மேலாண்மை இதழில் வெளியிடப்பட் டிருக்கின்றது.

தற்போது இலங்கையில் சுமார் 2,800 விசேட நிபுணர்கள் உட்பட 23 ஆயிரம் மருத்துவர்கள் சேவையில் உள்ளனர். இவர்களில் 1,085 மருத் துவர்கள் சிறப்பு வெளிநாட்டு பயிற்சியை பெற்று வரு கின்றனர்.

இலங்கையின் உள்நாட்டுப் போர் சமயத்தில் வெளியேறிய மருத்துவர் களை விடவும் அண்மைக்காலத்தில் நாட்டை விட்டு வெளியேறும் மருத் துவர்களின் எண்ணிக்கைதான் மிக அதிகம் என்று சுட்டிக் காட்டப்ப டுகின்றது.

மேல் கல்விக்காக செல்லும் வைத் தியர்களில் 20 வீதத்தினர் பெரும் பாலும் நாடு திரும்புவதில்லை என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இந்த மூன்று ஆண்டு காலத்தில் 1,209 மருத்துவ அதிகாரிகள் தங்கள் பதவிகளைக் காலியாக விட்டு விட்டு வெளியேறி விட்டனர்.

லண்டனில் 2019 க்கு முன்பு இலங்கையின் 152 ஆலோசகர்கள் மற்றும் 199 சிறப்பு மருத்துவர்கள் உட்பட 1,396 பேர் பணியில் இருந்த னர். ஆனால் 2024 இல் இது 391 ஆலோசகர்கள், 413 சிறப்பு மருத்து வர்கள் உட்பட 3,082 மருத்துவர்கள் என்ற கணக்கிற்கு வேகமாக அதிக ரித்து உள்ளது.

ஆஸ்திரேலியாவைபொறுத்தவரை அங்கு பணியாற்றி வரும் சர்வதேச மருத்துவ பட்டதாரிகளில் நான்கா வது பெரிய மூல நாடாக இலங்கை தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

ஆக, இலங்கையில் படித்துப் பட்டம் பெற்று, பயிற்சி பெற்று, தங்களை வலுப் படுத்திக் கொண்ட மருத்துவர்கள், அதன் பின்னர் பசுமை யான வாழ்வைத் தேடி, வெளிநாடு களுக்குச் சென்று, லண்டனிலோ ஆஸ்திரேலியாவிலோ அல்லது அது போன்ற நாடுகளிலோ தங்கள் பணி யைச் செய்து, உழைத்துக் கொண்டி ருக்கின்றார்கள். ஆனால் அவர்களுக்கு அந்த இலவச மருத்துவ கல்வியையும் உயர்ந்த மட்டத்தில் வழங்கிய இலங்கை நாடு மருத்துவர்கள் இல்லாமல் அல்லாடி கொண்டிருக் கின்றது.

நன்றி மறந்த கல்வியாளர்களினால் நாடு கஷ்டப்படுகின்றது என்பதுதான் உண்மை நிலைவரம் ஆகும்.






# தையிட்டி விவகாரம்; அரசின் உண்மை முகத்தை வெளிக்காட்டும்!



- கி.வசந்தரூபன் -


இலங்கைத் தீவு பல்லின சமூகத்தையும், பல்லின கலாசாரத்தையும் கொண்ட நாடு. ஆனால் மகாவம்ச சிந்தனையில்இருக்கும்சிலபௌத்தகடும்போக்குவாதிகள் இந்தத் தீவை ஒரு பௌத்த நாடாக மாற்ற முயல்கின்றனர். காலத்திற்கு காலம் ஆட்சிக்கும் வரும் ஒவ்வொரு ஆட்சியாளர்ய்ம் அதற்குத் துணை போகும் வகையிலேயே செயற்பட்டுள்ளார்கள். இதன் காரணமாகவே வடக்கு – கிழக்கு தமிழர் பகுதிகளில் திட்மிட்ட சிங்கள குடியேற்றங்களும், பௌத்தமயமாக்கல்களும் இடம்பெற்றுள்ளன. அதன் நீட்சியாகத் தான் தற்போதைய புதிய அரசாங்கத்தின் செயற்பாடும் அமையுமா என்ற கேள்வி பாதிக்கப்பட்ட தமிழ் மக்களிடம் எழாமல் இல்லை.

யாழ்ப்பாணம், தையிட்டியில் தனியாருக்குச் சொந்தமான காணியில் சட்ட விரோதமாக கட்டப்பட்ட விகாரை தொடர்பில் புதிய அநுர அரசாங்கம் எடுக்கப் போகும் முடிவுதான் அவர்களின் உண்மை நிலைப்பாட்டை வெளிப்படுத்தப் போகின்றது. ஊழல் ஒழிப்பு, மக்களுக்கான ஆட்சி என்ற கோசத்துடன், வடக்கு – கிழக்கு தமிழ் மக்களின் ஆதரவுடன் ஜனாதிபதியாக அநுரகுமார திஸநாயக்கா தெரிவு செய்யப்பட்டமையுடன், நாடாளுமன்றத்திலும் மூன்றில் இரண்டு பங்கு என்ற அறுதிப் பெரும்பான்மையைப் பெற தமிழ் பேசும் மக்களின் வாக்குகளும் பெரும் பங்காற்றியுள்ளன. இந்த நிலையில் அந்த மக்களின் நம்பிக்கையை இந்த அரசாங்கம் தக்க வைக்குமா என்பதே எல்லோராது கேள்வியுமாகும்.

முன்னைய அரசாங்கத்தின் காலப்பகுதியில் நீதிமன்ற உத்தரவுகளை மீறி குருந்தூர் மலையில் பௌத்த விகாரை ஒன்று கட்டப்பட்டிருந்தது. அந்த விகாரை கட்டுமாணம் தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கையை முன்னெடுத்த நீதிபதி கூட தனக்கு உயிர் அச்சுறுத்தல் எனக் கூறி நாட்டை விட்டு வெளியேறியிருந்தார். வவுனியாவில் வெடுக்குநாறி மலையில் கடந்த அரசாங்கத்தின் காலத்தில் சிவராத்திரி தினத்தில் இரவு வழிபாட்டு உரிமை மறுக்கப்பட்டு பலர் கைது செய்யப்பட்டு, பல்வேறு ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்ற நிலையில் நீதிமன்றத்தால் அவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டிருந்தமையும் தெரிந்ததே. ஆனால் இம்முறை சிவராத்திரி நிகழ்வு எந்தவித அச்சுறுத்தல்களும் இல்லாது வெடுக்குநாறி மலையில் இடம்பெற்றிருந்தது. ஆனால் அந்த வழிபாடுகள் மாலை 5 மணியுடன் நிறைவுக்கு வந்திருந்தது. இது ஆலய நிர்வாகத்தின் முடிவு எனச் சொல்லப்பட்டாலும், கடந்த வருடத்தில் இடம்பெற்ற சம்பவத்தால் ஆலய நிர்வாகத்தினர் மத்தியில் ஏற்பட்டுள்ள அச்ச உணர்வாலேயே சிவராத்திரியின் இராத்திரி வழிபாட்டை மேற்கொள்ள முடியாமல் போனது என்பதையும் மறுப்பதற்கில்லை. இவ்வாறு கடந்த அரசாங்கத்தின் காலத்தில் இடம்பெற்ற பௌத்தமயமாக்கல் செயற்பாட்டை நாம் தொடர்ந்தும் அடுக்கிக் கொண்டே போகலாம்.

யாழ்ப்பாணம், தையிட்டி திஸ்ஸ விகாரை நிர்மாணிக்கப்பட்டதில் இருந்து அது அமைந்துள்ள காணி உரிமையாளர்கள் தமது காணிகளை விடுவிக்குமாறு கோரியிருந்தனர். ஆனால் அவர்களது கோரிக்கைகள் கருத்தில் எடுக்கப்படாது விகாரை கட்டுமாணம் இராணுவத்தால் முன்னெடுக்கப்பட்டு அது தற்போது திறந்து, வழிபாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஆயுதப் போராட்டம் இடம்பெற்ற போது இராணுவத்தை ஓர் ஆக்கிரமிப்பு படையாகவே பார்த்திருந்தனர். ஆனால் யுத்தம் முடிவடைந்து 16 ஆண்டுகள் கடந்தும் அகிம்சையை போதித்த புத்த பகாவனின் சிலைகளை தமிழ் மக்கள் ஆக்கிரமிப்புச் சின்னமாகவே நோக்க வேண்டிய நிலையில் உள்ளனர். அரசாங்கத்தின் ஆக்கிரமிப்புச் செயற்பாடுகளால் புத்தர் மீதான தமிழ் மக்களின் பக்தி குறைந்து, அவர் மீதான கோபம் எழும்

தொடர்ச்சி▼




# தையிட்டி விவகாரம்; அரசின் உண்மை முகத்தை வெளிக்காட்டும்!

தொடர்ச்சி▲

நிலையை உருவாகி வருகிறது. மன்னராட்சி காலத்தில் தமிழ்ப் பேசும் பௌத்தர்களும் இந்த நாட்டில் வாழ்ந்துள்ளார்கள். அவர்களது வழிபாட்டுக்காக-வே வடக்கு - கிழக்கில் பௌத்த விகாரைகள் இருந்தன. ஆனால் இன்று அந்த நிலை மாறி, ஆக்கிரமிப்பு சின்னமாக பௌத்த விகாரைகளும், புத்த பெருமானும் மாறியுள்ளமை துரதிர்ஷ்டமே.

தையிட்டி விகாரை நிலத்தை விடுவிக்குமாறு கோரி மக்கள் அகிம்சை வழியில் ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் போராடி வருகின்றனர். லண்டனிலும் புலம்பெயர் தமிழ் மக்கள் இலங்கைத் தூதரகம் முன்பாகவும், பிரித்தானிய பிரதமர் இல்லம் முன்பாகவும் போராட்டத்திலும் ஈடுபட்டும் இருந்தனர். இவ்விடயம் தொடர்பில் நாடாளுமன்றத்தலும் பல அரசியல் வாதிகள் சுட்டிகாட்டியுள்ளனர். ஆனால் புத்தசாசன அமைச்சர், பிரதமர், ஜனாதிபதி ஆகியோர் இவ் விடயம் தொடர்பில் மௌனம் காத்து வருகின்றனர். அரசாங்கத்தின் இத்தகைய மௌனம் தமிழ் மக்கள் மத்தியில் இந்த அரசாங்கம் குறித்து ஓர் அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த அரசாங்கங்கள் விட்ட தவறை தற்போதைய அரசாங்கமும் செய்துள்ளது. ஒரு தேசிய இனம் அவ் விகாரை சட்டவிரோத விகாரை, தமிழ் தேசிய இனத்தின் நிலத்தை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ளதாக போராடி வரும் நிலையில், அதற்கு யாத்திரிகர் மடம் ஒன்று கட்டப்பட்டு இந்த அரசாங்கத்தின் அனுமதியுடன் அது அண்மையில் திறந்தும் வைக்கப்பட்டுள்ளது. ஆக கடந்த கால அசாங்க மனநிலையிலேயே இந்த அரசாங்கம் செயற்படுகின்றது என எண்ணத தோன்றுவதுடன், பௌத்தமயமாக்கல் சிந்தைனையில் ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு ஆட்சியும் உள்ளன என்பதை இது வெளிக்காட்டுகிறது.

இந்த் விகாரையில் மற்றுமொரு கட்டடம் கட்டப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், அந்த இடத்தை யாழ் மாவட்ட அரச அதிபர் ம.பிரதீபன் மற்றும் கடற்தொழில் அமைச்சர் சந்திரசேகரன் ஆகியோர் சென்று பார்வையிட்டனர் என வலி வடக்கு பிரதேச சபை தவிசாளர் சோ.சுகிர்தன் குற்றம் சாட்டியுள்ளார். ஆனால், தையிட்டி விகாரைப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக அங்குள்ள பௌத்த பிக்குவுடன் கலந்துரையாடவே தாம் அங்கு சென்றனர் எம மாவட்ட அரச அதிபர் ம.பிரதீபன் தெரிவித்துள்ளார்.

ஆக, இவ்விகாரை தொடர்பான விவகாரம் இன்னும் இரு இனங்களுக்கும் இடையில் மேலும் விரிசலை ஏற்படுத்தும் நிலையை நோக்கி நகர்கிறது. அது பல்லின சமூகம் வாழும் நாட்டிற்கு ஆரோக்கியமானது அல்ல. நாம் பேரின் காரணமாக பலவற்றை படித்துள்ளோம். எனவே அதனை உணர்ந்து செயற்பட வேண்டியது அரசியல்வாதிகளின் கடமை.

கடற்தொழில் அமைச்சர் இந்த விடயத்திற்கு விரைவில் தீர்வு காண்பதாகக் கூறியுள்ளார். அவ்வாறு தீர்வு காண வேண்டியது அவசியமே. ஆனால் அத் தீர்வானது பாதிக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதாக அமைய வேண்டும். அதுவே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகவும் உள்ளது.

எனவே, தமிழ் மக்களின் மனங்களை வெல்ல வேண்டுமாக இருந்தால் குறைந்தபட்சம் தையிட்டி விகாரை விடயத்திலாவது அரசாங்கம் மனிதபிமானவும், இதய சுத்தியுடனும் செயற்பட வேண்டும். அதுவே பல்லின சமூகம் கொண்ட இலங்கை தீவை ஒன்றுபட்டு கட்டியெழுப்ப வழி செய்யும் என்பதே உண்மை.

# தேவாலயப் பாதுகாப்பு வேலியை உடைத்துக்கொண்டு பிரதான சாலையில் விழுந்த வான் கடும் சேதமுற்றது!

## தலவாக்கலையில் சனியன்று சம்பவம்



(பொகவந்தலாவ எஷ்.சதீஷ்)

தலவாக்கலையில் உள்ள ஒரு தேவாலயத்திற்கு வந்த வான் ஒன்று பாதுகாப்பு வேலியை உடைத்துக் கொண்டு பிரதான சாலையில் விழுந்துள்ளது.

தலவாக்கலையில் உள்ள ஒரு தேவாலயத்திற்கு ஒரு குழுவை ஏற்றிச் சென்ற வான் ஒன்றே தேவாலயத்தின் பாதுகாப்பு வேலியை உடைத்துக்கொண்டு ஹட்டன் – நுவரெலியா பிரதான சாலையில் விழுந்து விபத்துக்குள்ளானதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

ஹட்டன் – நுவரெலியா பிரதான சாலைக்கு மேலே அமைந்துள்ள தேவா லயத்திற்கு வந்த வான் ஒரு திருப்பத்தை எடுக்க பின்னோக்கிச் சென்றபோது, கட்டுப்பாட்டை இழந்து சுமார் 15 அடி கீழே பிரதான சாலையில் விழுந்தது. இந்த விபத்து நேற்று முன் தினம் சனிக் கிழமை மாலை 5.40 மணியளவில் இடம்பெற்றுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் வானின் சாரதி மற்றும் மற்றொரு நபருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டன. விபத்தில் வான் பலத்த சேதமடைந்ததாகவும், விபத்துக் குறித்து விசாரணை நடத்தி வரும் தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.




# மட்டு நகரில் ஐஸ் போதைப்பொருளுடன் 22 வயது இளம் வியாபரி ஒருவர் கைது!



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் பிரிவிலுள்ள புதிய எல்லை வீதியில் போதை வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஆரையம்பதியைச் சேர்ந்த 22 வயது இளைஞன் ஒருவரை 2 கிராம் 170 மில்லிக்கிராம் ஐஸ் போதை பொருளுடன் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு தாங்கள் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரியந்த பண்டார தெரிவித்தார்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றையடுத்து கடந்த புதன்கிழமை சீலா முனை பகுதியில் வைத்து தலா 210, 140, 180 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் 3 இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்களை 7 நாள் பொலிஸ் தடுப்பு காவலில் வைத்து விசாரணை செய்ய நீதிமன்றத்தில்அனுமதியைபெற்று, இவர்களிடம் மேற்கொண்ட விசாரணையில் சம்பந்தப்பட்ட போதை பொருள் வியாபரி தொடர்பான தகவல்களைப் பொலிஸார் பெற்றனர் எனக் கூறப்படுகின்றது.

இதனையடுத்து பொலிஸ் போதை தடுப்பு ஊழல் ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் மாறுவேடத்தில் புதிய எல்லை வீதியில் சனி இரவு கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

இதன்போது அங்கு வியாபாரத்துக்காக ஐஸ் போதை பொருளை எடுத்து வந்த இளைஞனைக் கண்ட பொலிஸார் வரைச் சுற்றிவளைத்துக் கைது செய்தனர். அவரிடம் இருந்து 2 கிராம் 100 மில்லிக்கிராம் ஐஸ் போதை பொருளை மீட்டனர்.

கைது செய்யப்பட்டவரை விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

# நானுஓயா உடரெதல்ல தோட்டக் குடியிருப்பில் குடும்பஸ்தரின் சடலம் பொலிஸாரினால் மீட்பு!



(மஸ்கெலியா நிருபர்)

நுவரெலியா நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடரெதல்ல தோட்டக் குடியிருப்புப் பகுதியில் இருந்து ஆண் ஒருவரின் சடலத்தைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் அறுபது வயது மதிக்கத்தக்க குடும்பஸ்தரான எஸ்.வடிவேல் எனத் தெரியவருகிறது.

சடலம் இருப்பதைக் கண்ட பிரதேச மக்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து சடலம் மீட்கப்பட்டது.

உடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

# மாநகர முதல்வரின் அரசியல் பழிவாங்கலினால் வவுனியாவில் இறைச்சிக் கடைகளுக்குப் பூட்டு!

## சபை உறுப்பினர் பகிரங்கக் குற்றச்சாட்டு



(வவுனியா நிருபர்)

தனது வட்டாரத்தில் தன்னிடம் தோல்வியடைந்த இருவர் மாநகரசபை முதல்வரை பயன்படுத்தி அரசியல் பழி வாங்கலாகத் தனது தொழிலை முடக்கியுள்ளனர் என்றும் இதனால் இறைச்சி கடைகள் மூடப்பட்டுள்ளன எனவும் இலங்கை தொழிலாளர் கட்சியின் வவுனியா மாநகர சபை உறுப்பினர் பாருக் பர்ஸ்சான் குற்றம் சாட்டியுள்ளார்.

வவுனியா மாநகரசபைக்குட்பட்ட மாடு அறுக்கும் மடுவம் தொடர்பாக நேற்று ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த மூன்று நாள்களாக மடுவத்திற்கான மின்சாரம் வழங்கப்படவில்லை. அரசியல் பழிவாங்கல் அடிப்படையிலேயே இவ்வாறு செய்யப்படுகின்றது. இதனால் எமது தொழில் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது. இன்று (நேற்று) ஞாயிற்றுக்கிழமை அதிகமான வியாபாரம் செய்யக்கூடிய ஒரு நாள். ஆனால் இன்று இறைச்சிக்கடைகள் அனைத்தையும் மூடவேண்டிய அவல நிலைக்கு வந்துள்ளோம்.

மாவட்டத்தில் உள்ள உணவகங்களுக்கும் இறைச்சியை வழங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதுவரைகாலமும் இப்படியான ஒரு பிரச்சினை வந்ததில்லை. இதனை நம்பி தொழில் செய்யும் பல ஊழியர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே எமக்கு சரியான நீதியான தீர்வு வழங்கப்பட வேண்டும்.

கடந்த தேர்தலில் எனது வட்டாரத்தில் எனக்கு எதிராக போட்டியிட்டு தோல்வியடைந்த மாநகரசபை உறுப்பினர்களான லறீப், பாரி ஆகிய இருவரும் இணைந்தே எமது தொழிலை இல்லாமல் செய்யும் நோக்கத்துடன் பலமுறை மடுவத்திற்குள் வந்து எம்மை தொந்தரவு செய்கின்றனர். எனவே மாநகரசபை சரியான ஒரு முடிவை எனக்குத் தரவேண்டும். - என்றார்.

# செம்மணி மனிதப் புதைகுழி மீண்டும் இன்று முதல் அகழ்வு



(பிரபாகரன் டிலக்சன்)

இடைநிறுத்தப்பட்ட செம்மணி மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் இன்றைய தினம் மீள ஆரம்பமாகவுள்ளன.

யாழ்ப்பாணம், செம்மணி சித்துப் பாத்தி இந்து மயானத்தின் அபிவிருத்திப் பணிகளின் போது மனித என்பு எச்சங்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றின் உத்தரவுக்கமைய கடந்த மே மாதம் 15ஆம் திகதி முதல் முதலாம் கட்ட அகழ்வுப்பணிகள் ஆரம்பமாகின.

அந்தப் பகுதியில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக மே மாதம் 17ஆம் திகதி அகழ்வுப் பணிகள் நிறுத்தப்பட்டது. பின் ஜுன் மாதம் இரண்டாம் திகதி மீள ஆரம்பமாகி ஜுன் மாதம் 7ஆம் திகதியோடு முதலாம் கட்ட அகழ்வுப்பணிகள் நிறைவுக்கு வந்தன.

மொத்தமாக 9 நாள்கள் இடம்பெற்ற செம்மணி மனிதப் புதைகுழியின் முதலாம் கட்ட அகழ்வுப் பணியில் 19 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டிருந்தன.

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளை 45 நாள்கள் மேற்கொள்வது எனவும், 15 நாள்களுக்கு ஒருமுறை சிறிய இடைநிறுத்தல்களுடன் அகழ்வுப்பணிகளை மேற்கொள்வது எனவும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றால் தீர்மானிக்கப்பட்டது.


அதன் பிரகாரம் செம்மணி மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட முதல் 15 நாள்களுக்கான அகழ்வுப்பணிகள் கடந்த ஜுன் மாதம் 26 தொடக்கம் ஜுலை 10ஆம் திகதிவரை என 15 நாள்கள் தொடர்ச்சியாக நடைபெற்று இடைநிறுத்தப்பட்டது.

முதலாம் கட்ட அகழ்வு மற்றும் இரண்டாம் கட்டத்தின் முதல் 15 நாள்கள் இடம்பெற்ற அகழ்வு என மொத்தமாக 24 நாள்கள் இடம்பெற்ற செம்மணி மனிதப் புதைகுழி அகழ்விலிருந்து இதுவரை 65 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டு அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. மேலும் பாடசாலை புத்தகப்பை, சிறுமிகளின் ஆடைகள், பாதணிகள், காற்சங்கிலிகள், சிறிய பிளாஸ்டிக் வளையல்கள், பிளாஸ்டிக் பூமாலை உட்பட பல்வேறு சான்றுப் பொருள்களும் மீட்கப்பட்டிருந்தன.

இந் நிலையில் செம்மணி மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் இன்று காலை ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடதக்கது.



# கொம்பனித்தெரு சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் வருடாந்த மகோற்சவத்தில் தேர்த் திருவிழா நேற்று



கொழும்பு, கொம்பனித்தெரு அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவத்தையொட்டிய தேர் திருவிழா நேற்றுக்காலை சிறப்பாக நடைபெற்றது.

வசந்த மண்டபத்தில் சிவஸ்ரீ வரத அரவிந் சிவாச்சாரியார் தலைமையில் கிரிகைகள் நடைபெற்று தீபாராதனை இடம் பெற்றது. வள்ளி, தெய்வானை சமேத முருகப்பெருமான்

மங்கள வாரத்திய இசையுடன் தேரில் ஆரோகணித்து வெளிவீதி வலம் வருவதையும் கலந்து கொண்ட பக்தர்களையும் படங்களில் காணலாம்.









# தம்பலகாமம் ஆதிகோணைநாயகர் ஆலய மகோற்சவத்தில் தேர்த்திருவிழா நேற்று

(எஸ்.கீதபொன்கலன்)

தம்பலகாமம் ஆதிகோணைநாயகர் ஆலய தேர்த்திரு விழா நேற்றுக் காலை சிறப்பாக நடைபெற்றது. அப்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை:-







# ‘பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கு!’ கல்முனையில் கையெழுத்து வேட்டை


















(வி.ரி.சகாதேவராஜா)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கு என்ற கோரிக்கை உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து சம உரிமை இயக்கம் கல்முனை மாநகரில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பகல் கையெழுத்து வேட்டையொன்றை நடத்தியது.

அனைத்து இன மக்களுக்கும் சம உரிமை நீதி வேண்டும் மற்றும் அனைத்துக் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கும் நீதி வழங்கப்பட வேண்டும் என்ற சுலோகங்கள் அடங்கிய பதாதைகளை தொங்கவிடப்பட்டிருந்தன.

இதன் போது பலரும் தாமாகவே முன்வந்து கையொப்பமிட்டமையுடன் கருத்துக்களையும் தெரிவித்தனர்.





# விடத்தல்தீவில் கடற்கரையில் நிறுத்தப்பட்டிருந்த படகு,வெளி இணைப்பு இயந்திரம் தீ வைத்து எரிப்பு

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள விடத்தல் தீவு கிராமத்தில் கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மீனவர் ஒருவருடைய பல லட்சம் ரூபா பெறுமதியான மீன் பிடிப் படகு மற்றும் வெளி இணைப்பு இயந்திரம் ஆகியவை கடலில் வைத்து எரியூட்டப்பட்டுள்ளது. இது குறித்து அடம்பன் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

விடத்தல் தீவு கடற்கரையில் கடந்த சில தினங்களாக நிறுத்தி வைக்கப்பட்ட மீன்பிடி படகின் வெளி இணைப்பு இயந்திரம் முதலில் இனம் தெரியாத நபர்களினால் இரவு நேரங்களில் கடலில் தூக்கி வீசப்பட்டுக் கிடந்துள்ளது. அந்த வெளி இணைப்பு இயந்திரங்களை மீட்டு மீனவர்கள் கடல் தொழிலுக்குச் சென்று வந்துள்ளனர்.

இந்த நிலையில் விடத்தல் தீவு மேற்கு மீனவ கூட்டுறவுச் சங்கத்தின் பொருளாளர் கடந்த வெள்ளிக்கிழமை மீன் பிடிக்கக் கடலுக்குச் சென்று மீண்டும் படகைக் கொண்டு வந்து விடத்தல் தீவு கடற்கரையில் கட்டியிருந்தார்.படகில் பெறுமதியான வெளி இணைப்பு இயந்திரமும் பொருத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில் மறு நாள் நேற்று முன் தினம் சனிக்கிழமை காலை மீண்டும் தொழிலுக்குச் செல்ல குறித்த படகின் உரிமையாளர் கடற்கரைக்குச் சென்ற போது படகைக் காணவில்லை.

படகு மற்றும் வெளி இணைப்பு இயந்திரம் ஆகியவை சற்று தொலைவில் எரியூட்டப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்த விடயம் தொடர்பாக பாதிக்கப்பட்ட மீனவர் அடம்பன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். அடம்பன் பொலிஸார் வருகை தந்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

பின்னர் தடயவியல் நிபுணத்துவ பொலிஸார் அந்தப் பகுதிக்குச் சென்று எரியூட்டப்பட்ட படகு மற்றும் வெளி இணைப்பு இயந்திரம் ஆகியவற்றை பார்வையிட்டு விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தச் சம்பவம் விடத்தல் தீவு மீனவர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.
















# சுவாமி விபுலாநந்தரின் துறவைக் குறிக்கும் மாநாட்டில் நேற்றைய நிகழ்வுகளின் பதிவுகள்

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலா நந்தர் துறவு நூற்றாண்டு நினைவை யொட்டி இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், யாழ்ப்பாணப் பிரதேச செயலகம் மற்றும் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் என்பன இணைந்து நடத்தும் விழாவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை நல்லூர் துர்க்காதேவிமணி மண்டபத்தில் இரண்டாம் நாள் நிகழ்வு கள் ஆரம்பமாகின.

நிகழ்வில் சுவாமி விபுலாநந்த ருக்கு பூஜை நடைபெறுவதையும், தொடர்ந்து பேராசிரியர் சி.சிவலிங்க ராஜா மங்கள விளக்கேற்றுகின்றமை யையும்,

தமிழ்ச் சங்கத்தின் தலைவர் பேரா சிரியர் தி. வேல்நம்பி, தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையா ளர் கலாநிதி க.இரகுபரன் ஆகியோர் உரையாற்றுகின்றமையையும் பேரா சிரியர் சி.சிவலிங்கராஜா, பேராசிரியர் வ.மகேஸ்வரன், பேராசிரியர் எஸ்.சந்திர சேகரம், சிரேஷ்ட விரிவுரையாளர் பாஸ்கரன் சுமன், ஓய்வுநிலை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி.ரூபிவலன் ரினா, யாழ்ப்பாணம. பல்கலைக்கழக பௌதிகவியல் துறை, பேராசிரியர் மு.தணிகைச்செல்வன் ஆகியோர் அமர்ந்திருக்கின்றமையையும் கலந்து கொண்டோரையும், இடம்பெற்ற கலை நிகழ்வுகளையும் படங்களில் காண லாம்.

**(படப்பிடிப்பு:- எஸ்.சண்முகலிங்கம்)**











# அகமதாபாத் விமான விபத்து பற்றி செய்திகளை வெளியிட வேண்டாம்

## மத்திய அமைச்சர் கோரிக்கை

அகமதாபாத் விமான விபத்து குறித்து ஊகமான செய்திகள் வெளியிடுவதை தவிர்க்குமாறு மேற்கத்திய ஊடகங்களை சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் ராம் மோகன் நாயுடு வலியுறுத்தியுள்ளார்.

மேலும், கறுப்புப் பெட்டியில் உள்ள தரவை இந்தியாவிலேயே வெற்றிகரமாக டிகோட் செய்ததற்காக விமான விபத்து புலனாய்வுப் பணியகத்தை அவர் பாராட்டினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"விமான விபத்து புலனாய்வுப் பணியகம் அனைவருக்கும், குறிப்பாக மேற்கத்திய ஊடக நிறுவனங்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளது. அந்த ஊடகங்கள் ஊகமாக வெளியிடும் கட்டுரைகளில் தனிப்பட்ட ஆர்வம் இருக்கலாம் எனத் தெரிவித்துள்ளது.

நான் விமான விபத்து புலனாய்வுப் பணியகத்தை நம்புகிறேன். அவர்கள் செய்யும் வேலையை நம்புகிறேன்.





முழு கறுப்புப் பெட்டியையும் டிகோட் செய்து, இந்தியாவிலேயே தரவை வெளியிடுவதில் அவர்கள் ஒரு அற்புதமான வேலையைச் செய்துள்ளனர். இது நமக்கு மிகப்பெரிய வெற்றியாகும். ஏனென்றால் முந்தைய சம்பவங்களில், கறுப்புப் பெட்டியின் தரவுகளைப் பெற எப்போதும் வெளிநாடுகளுக்கு அவை அனுப்பப்பட்டன.

ஆனால், விமான விபத்து புலனாய்வுப் பணியகம் அனைத்தையும் வெற்றிகரமாக டிகோட் செய்திருப்பது இதுவே முதல் முறை. அதற்கான தரவு நம்மிடம் உள்ளது, முதற்கட்ட அறிக்கையும் வெளியாகியுள்ளது.

இதுகுறித்து இறுதி அறிக்கை வரும் வரை எந்தக் கருத்தையும் தெரிவிப்பது, நல்லதாக இருக்கும் என நான் நினைக்கவில்லை. நாங்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கிறோம், அறிக்கையை முழுமையாகப் படித்து வருகிறோம். மேலும், பாதுகாப்பு அடிப்படையில் தேவையானதைச் செய்யத் தயாராக இருக்கிறோம். இந்த விபத்து குறித்த விசாரணையைப் பற்றி எதையும் சொல்வதற்கு முன் இறுதி அறிக்கைக்காக நாம் காத்திருப்போம்." என தெரிவித்துள்ளார்.

# பா.ஜ.க. அரசுக்கு எதிராக செயல்பட இண்டியா கூட்டணி தீவிர ஆலோசனை

நாடாளுமன்ற கூட்டம் இன்று தொடங்க உள்ள நிலையில், இந்த கூட்டத் தொடரில் பா.ஜ.க. அரசுக்கு எதிராக செயல்படுவது குறித்து இண்டியா கூட்டணி கட்சிகள் நேற்று முன்தினம் தீவிர ஆலோசனை நடத்தின.

இந்த கூட்டத்தில் காங்கிரஸ், தி.மு.க, திரிணமூல் உள்ளிட்ட முக்கிய கட்சிகள் பங்கேற்றன. இண்டியா கூட்டணியில் இருந்து விலகியதாக அறிவித்த ஆம் ஆத்மி இந்த கூட்டத்தில் பங்கேற்கவில்லை.

கடந்த 2024 மக்களவை தேர்தலில் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியை (என்.டி.ஏ) தோற்கடிக்க எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து இண்டியா கூட்டணியை உருவாக்கியது. இந்த கூட்டணியில் காங்கிரஸ், திரிணமூல், திமுக, இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கொம்யூனிஸ்ட், ராஷ்டிரிய ஜனதா தளம், ஆம் ஆத்மி, உத்தவ் தாக்கரேவின் சிவசேனா உள்ளிட்ட கட்சிகள் இணைந்து போட்டியிட்டன.

மேலும், இண்டியா கூட்டணி 2024 மக்களவை தேர்தலுக்காக மட்டுமே அமைக்கப்பட்டது என அதில் இருந்த பெரும்பாலான கட்சிகள் அவ்வப்போது கூறிவந்தன.

இதற்கிடையே, 2024 மக்களவை தேர்தலுக்கு பின்னர் நடைபெற்ற ஹரியானா, டில்லி சட்டப்பேரவை தேர்தல்களில் காங்கிரஸ், ஆம் ஆத்மி கட்சிகள் தனித் தனியாகவே போட்டியிட்டன. மேலும், வரவிருக்கும் பிஹார் சட்டப்பேரவை தேர்தலிலும் ஆம் ஆத்மி கட்சி தனித்து போட்டியிட உள்ளதாக அறிவித்துள்ளது.

இருந்தபோதிலும், நாடாளுமன்ற கூட்டம் போன்றவற்றில் ஒருமித்த



எதிர்ப்பை தெரிவிப்பதற்காக காங்கிரஸ் கட்சி, இண்டியா கூட்டணி என்ற பெயரில்தான் ஆலோசனை கூட்டம் நடத்தி வந்தது.

இந்நிலையில், நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் இன்று தொடங்க உள்ளது. இந்த கூட்டத்தொடர் சுமார் ஒரு மாதம் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த கூட்டத்தொடரில் முக்கியமான பல மசோதாக்களை கொண்டு வர மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. அதே போல, எதிர்க்கட்சிகளும் பல முக்கிய விவகாரங்களை எழுப்ப திட்டமிட்டுள்ளன.

இதை தொடர்ந்து, நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் செயல்படுவது குறித்து ஆலோசிக்கும் வகையில், மழைக்கால கூட்டத் தொடருக்கு முன்னதாக எதிர்க்கட்சி கூட்டத்தை நடத்த காங்கிரஸ் திட்டமிட்டிருந்தது.

இந்த சூழலில், இண்டியா கூட்டணியில் இருந்து ஆம் ஆத்மி வெளியேறி விட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதை அந்த கட்சியின் தேசிய தலைமை ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கேஜ்ரிவால் வெள்ளிக் கிழமை அறிவித்தார். இதன்மூலம் இண்டியா கூட்டணியில் விரிசல் ஏற்பட்டுள்ளதாக அரசியல் நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், இண்டியா கூட்டணி கட்சி தலைவர்களின் ஆலோசனை கூட்டம் காணொலி வாயிலாக நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. பிஹார் சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தம், ஜம்மு-காஷ்மீர் மாநிலம் பஹல்காமில் நடந்த தீவிரவாத தாக்குதல், அதை தொடர்ந்து, பாகிஸ்தான் மீது நடத்தப்பட்ட 'ஆபரேஷன் சிந்தூர்' இராணுவ நடவடிக்கை ஆகியவை குறித்து இந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தில் இந்த விவகாரங்கள் குறித்து கேள்வி எழுப்பவும், நீண்ட விவாதம் நடத்தவும் ஆளும் பா.ஜ.க. அரசை வலியுறுத்த முடிவு செய்யப்பட்டது. மேலும், நாடாளுமன்ற கூட்டத் தொடரில் மத்திய பா.ஜ.க. அரசுக்கு எதிராக செயல்படுவதாகவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.




# மர்ம நபரின் துப்பாக்கிச் சூட்டில் 3 பேர் உயிரிழப்பு; பலர் படுகாயம்

அமெரிக்காவின், வொஷிங்டனில் உள்ள கிர்க்லேண்ட் பகுதியில் மர்ம நபர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 3 பேர் உயிரிழந்துள்ளனர். பலர் படுகாயம் அடைந்தனர்.

காயமடைந்த அனைவரும் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

லொஸ் ஏஞ்சலிஸ் பகுதியில், வாகனம் ஒன்று பெரிய கூட்டத்திற்குள் புகுந்த சில மணி நேரங்களுக்குப் பிறகு, இந்த சம்பவம் இடம்பெற்றுள் ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூடு நடத்திய நபரை பொலிஸார் தேடி வருகின்றனர் என அமெரிக்கச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும், துப்பாக்கிச் சூடு நடந்த இடத்திற்கு, மக்கள் செல்வதைத் தவிர்க்க வேண்டும் என, அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் குறித்து அமெரிக்கப் பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் என அந்த நாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.


# அடுத்தடுத்து நிலநடுக்கங்கள்; ரஷ்யாவில் சுனாமி எச்சரிக்கை

ரஷ்யாவின் கம்சட்கா தீபகற்பத்தின் கிழக்கு கடற்கரையில் இன்று ஏற்பட்ட 7.4 ரிக்டர் அளவிலான நிலநடுக்கத்தைத் தொடர்ந்து ரஷ்யாவின் சில பகுதிகளுக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க தேசிய சுனாமி எச்சரிக்கை மையம் தெரிவித்துள்ளது.

ரஷ்யாவின் பசிபிக் கடற்கரையில் 7.4 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் உட்பட மூன்று நிலநடுக்கங்கள் பதிவானதை அடுத்து சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நேற்று 6.7 மற்றும் 5 ரிக்டர் அளவிலான தொடர்ச்சியான நிலநடுக்கங்கள் கம்சட்கா மண்டலத்தின் தலைநகரான பெட்ரோபாவ்லோவ்ஸ்க்-கம்சாட்ஸ்கிக்கு கிழக்கே சுமார் 140 கிலோ மீற்றர் தொலைவில் ஏற்பட்டன. இந்த பகுதியில் 180,000 இற்கும் அதிகமான மக்கள் வாழ்கின்றனர்.

இந்த நிலநடுக்கங்கள் பெட்ரோபாவ்லோவ்ஸ்க்-கம்சாட்ஸ்கி கடற்கரையில் அடுத்தடுத்து 32 நிமிடங்களுக்குள் தாக்கின. இதன் பின்னர் 7.4 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் 20 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்டதையடுத்து ரஷ்யாவின் சில பகுதிகளுக்கு அமெரிக்க தேசிய சுனாமி எச்சரிக்கை மையம் சுனாமி எச்சரிக்கையை விடுத்தது.



பசுபிக் பெருங்கடலுக்கு அருகே உள்ள பெட்ரோபாவ்லோவ்ஸ்க்-கம்சாட்ஸ்கி பகுதியானது ஜப்பானின் வடகிழக்கிலும், அமெரிக்க மாநிலமான அலாஸ்காவின் மேற்கிலும் அமைந்துள்ளது.

கம்சட்கா தீபகற்பம் பசிபிக் மற்றும் வட அமெரிக்க டெக்டோனிக் தகடுகள் சந்திக்கும் இடமாகும், இது ஒரு நில அதிர்வு வெப்ப மண்டலமாக அமைந்துள்ளது. இப்பகுதியில் 1900ம் ஆண்டு முதல் 8.3 ரிக்டருக்கு மேற்பட்ட ஏழு பெரிய நிலநடுக்கங்கள் தாக்கியுள்ளன.

# இந்தோனேசிய பயணிகள் கப்பலில் திடீர் தீப்பரவல்; மூவர் உயிரிழப்பு

இந்தோனேசியாவின் வடக்கு சுலவேசி மாகாணத்தில் பயணிகள் கப்பல் ஒன்று தீப்பிடித்ததில் மூன்று பேர் உயிரிழந்தனர்.

சுமார் 150 பேர் மீட்கப்பட்டனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தேடல் மற்றும் மீட்பு நடவடிக்கை தொடர்ந்தும் நடைபெற்று வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் நேரப்படி நேற்று பிற்பகல் 1 மணியளவில் இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இதேவேளை, தீப்பரவல் ஏற்பட்ட வேளையில், சுமார் 280 பேர் கப்பலிலிருந்தனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.



# இன்றைய ராசி பலன்கள் -21.07.2025




பொறுமையான அணுகுமுறை தேவை. திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். உறுதியான அணுகுமுறை தேவை.

பணியிடச் சூழல் அவ்வளவு சிறப்பாக இருக்காது. பணியில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. மகிழ்ச்சியை தக்க வைக்க உங்கள் துணையுடன் அனுசரித்து செல்ல வேண்டும்.

பயணத்தின் போது பண இழப்புகள் நேரலாம். எனவே கவனமாக இருக்க வேண்டும்.

கால் வலியால் அவதிப்பட நேரலாம். தியானம் அல்லது யோகா மேற்கொள்வது நல்லது.




இன்று உங்களுக்கு உற்சாகமான மகிழ்ச்சிகரமான நாள். இன்றைய தினத்தை கொண்டாடி மகிழ்வீர்கள். இது உங்களுக்கு மிகுந்த திருப்தி அளிக்கும். உங்கள் விருப்பங்களை திருப்திகரமாக நிறைவேற்றும் நாள்.

பணியில் அதிக வாய்ப்புகள் காணப்படுகின்றன. நீங்கள் திருப்தியாக உணர்வீர்கள். இன்று கிடைக்கும் புதிய வாய்ப்புகள் உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும்.

உங்களின் கருத்துக்களை உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக பகிர்ந்துகொள்வீர்கள். இதனால் ஒருவரையொருவர் நன்கு புரிந்துகொள்வீர்கள்.

நிதியைப் பொறுத்தவரை இன்று திருப்திகரமாக இருக்கும். இன்று நீங்கள் பணம் சேமிப்பீர்கள். உங்கள் சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.

உங்களை வருத்திக்கொள்ளாமல் இருந்தால் இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். உங்களை நீங்கள் மகிழ்ச்சியாக வைத்திருந்தால் நலமாக இருக்கலாம்.




இன்றைய நாளை முன்கூட்டியே திட்டமிட்டு அதன்படி நடந்து கொள்ள வேண்டும். முக்கியமான முடிவுகளை இன்று எடுப்பதை தவிர்க்கவும். அதனால் சில பிரச்சினைகள் ஏற்படும். எனவே சிறிது கவனமுடன் இருக்க வேண்டும்.

இன்று சாதகமான பலன்களைப் பெற அதிக முயற்சிகள் எடுக்க வேண்டும். இன்று சிறப்பான நாளாக அமையாது. இன்று பணிச்சுமை காணப்படும்.

நீங்கள் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். இதனை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இன்று பொறுமையாக இருக்க வேண்டியது அவசியம்.

இன்று பணபுழக்கம் போதுமானதாக இருக்காது. தேவையற்ற செலவினங்கள் அதிகமாக இருக்கும்.

முதுகு மற்றும் மூட்டுக்களில் விறைப்பு காணப்படும். உடற்பயிற்சி மற்றும் தியானம் மேற்கொள்வது நல்லது.




இன்று உங்களுக்கு சாதகமான நாள் அல்ல. பலன்கள் தாமதமாகக் கிடைக்கும். அதிகம் எதிர்பார்க்காதீர்கள். பிரார்த்தனையில் உங்களை ஈடுபடுத்திக் கொள்வது உங்களுக்கு ஆறுதலை அளிக்கும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். உங்கள் பணிகளை சிறப்பாக திட்டமிடுங்கள்.

உங்கள் மனதில் காணப்படும் பதட்டத்தை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இதனை தவிர்த்தல் நலம். உங்களை அமைதியாக வைத்திருங்கள்.

உங்கள் மதிப்பு மிக்க உடைமைகளை பத்திரமாக வையுங்கள். இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. நீங்கள் பணத்தை இழக்க நேரலாம்.

தோல் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படலாம். எண்ணெய் பதார்த்தங்களை தவிர்ப்பது நல்லது.




இன்று உங்களிடம் பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும். இன்று அவ்வளவு சிறப்பான நாளாக அமையாது. உங்கள் வளர்ச்சி குறித்து கவலைப் படுவீர்கள். இன்று அதிர்ஷ்டம் குறைந்து காணப்படும்.

இன்று பணியில் உங்களிடம் பொறுமை காணப்படாது. இதனால் தவறுகள் நேரலாம். மனதை நிலைப்படுத்தி பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். நீங்கள் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்க வேண்டும்.

இன்று பண இழப்பு காணப்படுகின்றது. நீங்கள் கடன் வாங்க நேரலாம். சிறந்த முறையில் பணத்தை நிர்வகிக்க முயலுங்கள்.

தொண்டை எரிச்சல் மற்றும் தலைவலி ஏற்பட வாய்ப்பு உள்ளது. குளிர்ச்சியான நீரைப் பருக வேண்டாம். உடற்பயிற்சி செய்வது நல்லது.




இன்று உங்களின் சொந்த முயற்சி மூலம் வளர்ச்சி காணப்படுகின்றது. வெற்றி நிச்சயம்.

பணியிடத்தில் பதவி உயர்வுக்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் கடின உழைப்பு பாராட்டைப் பெறும். உங்கள் பணியின் தரத்தை மேம்படுத்துவீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை கொண்டிருப்பீர்கள். இதனால் உங்கள் அன்பு அதிகரிக்கும்.

நிதிநிலைமை சிறப்பாக காணப்படுகின்றது. இன்று பணத்தை சுதந்திரமாக கையாள்வீர்கள்.

இன்று உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக சிறந்த ஆரோக்கியம் காணப்படும்..




இன்று சுறுசுறுப்பான மன நிலையில் காணப்படுவீர்கள். மிகுந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். சுய வளர்ச்சிப் பாதையில் செல்வீர்கள். உங்களிடம் மாற்றம் உணர்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

பணியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். இதற்கு உங்களிடம் காணப்படும் தன்னம்பிக்கையே காரணம்.

உங்கள் துணையுடன் சுமுகமாகப் பழகுவீர்கள். உங்கள் அனுசரனையான அணுகுமுறை அவரை மகிழ்விக்கும். உறவில் பிணைப்பு வலுப்படும்.

நிதிநிலைமை முன்னேற்றகரமாக காணப்படும். உங்கள் சேமிப்பை அதிகரிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் தைரியம் மற்றும் உறுதி காரணமாக நீங்கள் மிகவும் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




உங்களால் இன்று மகிழ்ச்சியை தக்க வைத்துக்கொள்ள முடியாது. வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் மனதுக்கு ஆறுதல் கிடைக்கும்.

பணியில் வெற்றி காண மிகுந்த முயற்சி எடுக்க வேண்டும். எனவே சுமுகமாக பணிகள் நடைபெற திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் குறைந்த நேரத்தை செலவு செய்வீர்கள். உறவில் மகிழ்ச்சி நிலவ எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும். உங்கள் பணத்தை இன்று முறையாக பயன்படுத்த இயலாது.

இன்று ஆரோக்கியம் சுமாராக காணப்படும். சரியான நேரத்தில் உணவு உண்ண வேண்டும். அதிகமான நீரைப் பருக வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் -21.07.2025




இன்று சிறிது சோம்பலுடன் காணப்படுவீர்கள். மனதில் குழப்பம் காணப்படும். இன்றைய நாளை உங்களுக்கு சாதகமாக்கிக் கொள்ள இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நலம்.

இன்று முழுவதும் பணியில் முழுகியிருப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்காது.

இன்று உங்கள் இருவரிடையே காணப்படும் மனக் குழப்பம் காரணமாக உங்கள் துணையுடன் சுமுகமான உறவு காணப்படாது. எனவே குழப்பத்தை தவிர்த்து தெளிவான எண்ணங்களை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

பணத்தை கவனமாகக் கையாள வேண்டும். அஜாக்கிரதை காரணமாக பணத்தை இழக்க நேரலாம்.

கண்களில் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளதால் கவனமாக இருக்க வேண்டும்.




இன்று சிறந்த அதிர்ஷ்டம் காணப்படும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்கள் அணுகுமுறையில் வளைந்து கொடுக்கும் போக்கு காணப்படும்.

உங்கள் சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளுடன் விருந்தில் கலந்து கொள்வீர்கள். அவர்களுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள்.

இன்று உங்கள் துணையிடம் காதல் உணர்வை வெளிபடுத்துவீர்கள். இதனால் உங்கள் பிரியமானவரிடத்தில் அன்பு அதிகரிக்கும்.

இன்று பணவரவிற்கான வாய்ப்பு உள்ளது. பங்கு வர்த்தகத்தின் மூலம் பணம் சம்பாதிப்பீர்கள்.

இன்று அதிக ஆற்றலுடனும் உறுதியுடனும் காணப்படுவீர்கள். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று மகிழ்ச்சியான நாள். இன்றைய செயல்களின் விளைவுகள் உங்களுக்கு சாதகமாக அமையும். கடினமான பணிகளையும் இன்று எளிதாகச் செய்வீர்கள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கான வாய்ப்பு உள்ளது.

மேலதிகாரிகளின் பாராட்டுகள் குவிந்து கொண்டே இருக்கும். பணிகளை குறித்த நேரத்துக்கு முன்பே தரமாக முடித்துத் தருவீர்கள்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள்.இது நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்தும்.

எதிர்பாராத பண வரவுகள் காணப்படும். நீங்கள் ஆச்சரியப்படும் அளவில் உங்கள் வருமானம் அதிகரிக்கும். மகிழ்ச்சி நிலவும்.

உங்களிடம் காணப்படும் தைரியம் மற்றும் உறுதி காரணமாக இன்று முழு ஆரோக்கியத்துடன் திடமாக காணப்படுவீர்கள்.




உங்களின் சொந்த முயற்சி மூலம் இன்று நீங்கள் அபாரமான வளர்ச்சி காண்பீர்கள்.

பணியிடத்தில் பதவி உயர்வு கிடைக்கலாம். இன்று அர்ப்பணிப்புடன் பணி புரிவீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு கொண்டிருப்பீர்கள். உங்கள் அணுகுமுறை மூலம் அவரின் இதயத்தில் இடம் பிடிப்பீர்கள்.

நிதி நிலைமையில் முன்னேற்றம் கானப்படும். வங்கியிருப்பை நல்ல முறையில் பராமரிப்பீர்கள். திருப்தி நிலவும்.

சாதரணமான அணுகுமுறை மூலம் ஆற்றல் அதிகரிக்கும். அதன் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

எந்தக் காலத்திலும்.. எந்த வடிவத்திலும்
உங்களோடு நாங்கள்...



செந்தியின்
தமிழன்
வழிகாட்டி
Tamils' Guide
Since 1996
416-615-4646 info@tamilsguide.com
www.tamilsguide.com